Registered as a News Paper in Ceylon P.M. G. No. H. A 9/399 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு கார்த்திகைமீ உகவ வெள்ளிக்கிழமை (14 December. 1962) [இல-நடசா

# அகில இலங்கைச் சைவமகாநாடும் பரிசளிப்பு விழாவும்

## தமிழ்கூறும் நல்லுலகு கண்ட தலைசிறந்த சைவ அறிஞர்கள் பங்குபற்றுகின்றனர்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் 1962 டிசம்பர் 24, 25, 26-ம் நாட்களில் மேற்படி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஒரு அகில இலங்கைச் சைவமகாநாடு கூட்டப்படுகிறது. இந்தியாவிலிருந்து திருவாவடுதுறை மகா வித்துவான் உயர்திரு.ச. தண்டபாணிதேசிகர் அவர்களும், கோயம்புத்தூர் உயர்திரு. நா. கிரிதாரி பிரசாத் அவர்களும், சேலம் அரசினர் கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீமதி. கு. காமாட்சியம்மையார் M. A, அவர்களும் கோயம்புத்தூர் புலவர் உயர்திரு. கோ. முருகையா அவர்களும், இலங்கைச் சைவ அறிஞர்களும் மகாநாட்டில் தலைமை வகித்தும் சைவசமய சம்பந்தமான விரிவுரைகள் நிகழ்த்தியும் மாநாட்டைச் சிறப்பிப்பார்கள், சபையாரால் சென்ற ஏப்பிரில் மாதத்தில் நடத்தப்பட்ட தேவாரம் உபந்நியாசம் புராணபடனத் தேர்தல்களில் திறமையடைந்த மாணவ மாணவிகளுக்கும், இந்துசாதனம் நடாத்திய நல்லூர்க்கந்தன் சமயப் போட்டியிலும், சேதுப்பிள்ளை கட்டுரைப்போட்டியிலும் வெற்றிபெற்றோருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். சைவ மகாநாட்டுக்குச் சமுகமளிக்கும் அன்பர்களுக்குத் தினமும் மத்தியானப் போசனம் இலவசமாக வழங்கப்படும்.

——

## நற்சிந்தனை

தன்னைத் தன்னா
லறிந்த ஞானிகள்
விண்ணில் விளங்கும்
வெய்யவன் போல்வார்.

## மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை மூட வேண்டாம்

——

சென்ற 9-12-62 ஞாயிற்றுக்கிழமை சைவ பரிபாலன சபையின் செயற்குழுக்கூட்டம் சபைநாவலர் மண்டபத்தில் நடைபெற்றபோது 'யாழ்ப்பாணத்தில் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் தேவை பெரியதென்றும், ஆகையினால் இராமநாதன் துரையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிலத்தில் கட்டப்பட்டுள்ள கோப்பாய் மகளிர் கல்லூரி தொடர்ந்து தமிழ்மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்றும், அதனை மூடக்கூடாதென்றும் அரசினரைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ——

## விநாயகர் நோன்பு

——

சென்ற 12-12-62 புதன்கிழமையிலிருந்து ஆரம்பமாகியுள்ள விநாயகர் நோன்பினை முன்னிட்டு வண்ணை சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் ஆலயத்திலும் வழமைபோல விநாயகர் நோன்பு அபிடேகம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

——

உ

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தருேன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றும்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தம்முங்
குழற்கணிந்தகோள்கையோடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபோற்புந்தோன்றும்
பொழிறிகளும்பூவணத்தெம்புனிதனர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

## மூலமும் உரையும்

[சித்தாந்தபண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 2)

மாணுக்கனின் விஞக்கள்:

ஆறுறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறு வினையேது மற்றிவற்றின் — வேறகா
நானேது நீயேது நாதன்நடம் அஞ்செழுத்துத்
தானேது தேசிகனே சாற்று. 2.

கொ—கூ: தேசிகனே, ஆறு ஆறு தத்துவம் ஏது? அன்றே (உளதாய் இன்றுவரையும்) தான் மாறு ஆணவம் ஏது? வினை ஏது? (மற்று) இவற்றின் வேறு ஆகா நான் (ஆன்மா) ஏது? நீ (பதி) ஏது? நாதன் நடம் ஏது? அஞ்சு எழுத்துத்தான் ஏது? (நீ) சாற்று.

ப—ரை: தேசிகனே - எனது ஞானுசிரியனே, ஆறு ஆறு தத்துவம் ஏது - முப்பத்தாறு தத்துவங்கள் எனச் சொல்லப்படுபவை யாவை? அன்றே தான் மாறு ஆணவம் ஏது - அநாதியே ஆன்மாவோடு உளதாய் இன்றுவரை

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# பக்தியின் பொருள்

———0———

(ஆச்சாரிய வினேபாஜி)

ஏழை எளியோருக்கு உதவுதலே கடவுள் வழிபாடு என்பதை நாம்புரிந்து கொள்ளவேண்டும். அடிக்கடி நடப்பதென்ன? நாம் தெருவழியிலே போகையில் எவரேனும் நோயினுலோ வயிற்றுக்கில்லாமையினுலோ, 'ஐயா! எனக்கு உதவுங்கள்' என்று சொல்லிக் கேட்டால், அதைக் காண, கேட்க சகியாமல் ஒரு பைசா, காலணு எடுத்துப் போட்டுவிட்டுப் போகிறோம். ஆனல் எதிர்ப்பட்ட அந்தஎளியவன்-நோயாளி-கடவுளே, என்று நாம் நினைக்கிறோமா? நம்மிடம் கைநீட்டி யாசிக்கும், அவர்கள் கடவுளே! அவர்கள் பசியையும் நோயையும் போக்குதல் கடவுள் வழிபாடே என்று நாம் எண்ணுவது உண்டா? இதே போன்றுதான் நாம் ஒவ்வொருநாளும் பிறருக்குச் செய்யும் உதவியே கடவுள் பூசையென்று நமக்குத் தோன்றுகிறதா?

நாம் கிராமம் கிராமமாய், வீடு வீடாயச் சென்று எவர் என்ன கஷ்டப்படுகிறார், ஏழை எளியோர் படும் துன்பங்களென்ன, யாருக்கு என்ன நோய் என்பதை விசாரித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டு நம்மாலான உதவி செய்யவேண்டும். ஆனல்,

நாம் இப்பொழுதும் கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தர்சித்தால் போதும்என்று வைத்துக்கொண்டு பிறரிடம் நெஞ்சில் ஈரமில்லாமல் நடந்துகொள்கிறோம் பிறரை ஏமாற்றுகிறோம்.

அநியாய வட்டி கேட்கிறோம். இதெல்லாம் செய்தல் கடவுளுக்குப் பொறுக்காதென்பதை நாம் அறிவதில்லை. இன்று கடைகளில் விற்கும் எல்லாப் பொருள்களிலும் ஒரே கலப்படம்.

உணவுப் பண்டங்களும் மருந்துகளும்கூட சுத்தமானவையாகக் கிடைப்பதில்லை, இவ்வாறு ஒருபக்கம் வியாபாரம் செய்துகொண்டு மறுபுறத்தில் சிறிது தர்மம் செய்துவிடுவதனுல் நாம்செய்த பாவத்திற்குப்பரிகாரமாகிவிடாது.

—:—

# உள்ளம் ஒடுங்கி ஒளி காண

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: அம்சத்தொனி :: தாளம்: ரூபகம்

பல்லவி

சரணம் சரணம் விநாயகா
சகல லோக நாயகா (ச)

அனுபல்லவி

பிரணவ மெனும் பெரும்பொருளே
கருணைநிறைந்த கலையருளே (ச)

சரணம்

கள்ளங் கபட காம பாண
கயவ ரழிந்துன் கழலைப் பேண
உள்ளமொ டுங்கி ஒளியைக் காண
ஓங்காரத்தின் ஒலியைப் பூண. (ச)

## புராண ஆசானுக்குப் பாராட்டு

தெல்லிப்பழை இந்து சமய விருத்திச்சங்க ஆதரவில் மகாஜனக்கல்லூரியில் நடைபெற்றுவந்த "பெரிய புராணம்" என வழங்கும் திருத்தொண்டர் புராண வகுப்பு, நிகழும் சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 31-ந் திகதி (16-12-62) ஞாயிற்றுக்கிழமை கல்லூரி ஆலயத்தில் நிறைவெய்தும்.

மு. ப. 9 மணிக்குக் கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு விசேட பூசையும், 10 மணிக்கு "வெள்ளானைச்சருக்கம்" புராண படனமும், 11-30 மணிக்கு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சுபகிருது ௵ கார்த்திகை மீ உ௮ வெள்ளிக்கிழமை

## மனித உரிமைகளை மதிப்போம்

மார்கழி (ஆங்கிலம்) பத்தாம் நாளை மாநிலத்தில் மனித உரிமை மகிமை நாளாக நினைவு செய்தல் வேண்டுமென்ற மரபு வழங்கிப் பல்லாண்டுகளாக வழங்கிவருகின்றது. மனித உரிமைகளை வழங்குவதும் மனிதர்களே. பெறுகின்றவர்களும் மனிதர்களே. எனவே மனித உரிமைகளை மதித்துப் பேண வேண்டியவர்களும் மனிதர்களே. அப்படியானல் ஏன் உரிமைகளைப்பற்றி நெருக்கடி உலகில் எழ வேண்டும்? எல்லாரும் மனிதப் பண்பில்லாத நிலைமையில் இருப்பதினுலேயே என்க,

உரிமைகள் என்று உரைக்கும்பொழுதே அவற்றுடன் கடமைகளும் உள என்ற உண்மை உதித்தல் வேண்டும். இந்த உண்மையை அறியாதவர்களே உலகில் நெருக்கடியை உண்டுபண்ணிக் கலகத்துக்கு வழிவகுத்துப் போர் புரிகின்றவர்கள். மனித நெறி புனிதமானதென்ற நினைவு மக்கள் மனத்திற் பதியும் வண்ணம் இளமை தொடக்கம் பழக்கம் இருத்தல் வேண்டும். இதற்குக கல்வி முறையே மனித நெறியைப்பற்றி நன்கு போதித்தும் சாதித்தும் மாணுக்கர்களிற் பண்பு தோனறக்கூடிய வகையில் அமைக்கப்பெறுதல்வேண்டும்.

இன்று இவ்வையகம் இருக்கின்ற நிலைமையை எடுத்தாராய்ந்து நோக்கின் எந்தத் திக்கிலும் நெருக்கடியே தோற்றுகின்றது. உரிமைப்போராட்டம் என்று ஊக்கமாகப் பேசுகின்றவர்களும் தாங்களே ஏனையோரை வருத்துகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். சுய நயத்தாற் பிறர் நயங் கருதாதவர்கள் மனித நெறியுடையராவரா? இந்திய - சீன நெருக்கடியைத் தீர்க்க எத்தனை நாடுகள் கூட்டங்கள் கூடுகின்றன. இத்தனை நாடுகளுக்கும் அத்தகைய நெருக்கடி உண்டென்பதை உலகமறியும். நீதியும் நியாயமும் வகுக்கும் நெறியுள்ளவர்களைத் தேடியும் காணமுடியாத சீர்கேடு பாரெங்கும் உணடென்றால் யார் யாருக்குப் புத்திபுகட்ட முடியும்!

உரிமையும் கடமையும் ஒன்றுக்கொன்று இணைபிரியாத தேவை என்ற உணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெளிவாக உதிக்குமேயானல் நெருக்கடி நிகழவேமாட்டாது. மனித உரிமை நினைவு நாளிலே மாநாடு கூடி பேச்சலங்காரப் பிரசங்கங்கள் செய்து விட்டாற் போதும் என்ற எண்ணம் பிழை. உரிமை நாடுகின்றவர்கள் கடமை செய்தவர்களாய் இருத்தல் வேண்டுமென்ற விதியின்படி தவறாது ஒழுகி வருவதற்கான உயர்ந்த வாழ்க்கை நெறியை வகுத்து, அதற்குத்தக வாழ்ந்து காட்டுபவர்களே தலைவர்களாவார். காந்திப் பெரியார் போன்றவர்களே இந்த உயர்ந்த பண்பாட்டை உலகில் நிலைநாட்டக் கூடியவர்கள். உரிமைகளை நினைக்கும் பொழுதே, . நாம் கடமைகளை உரியவாறு புரிந்துவிட்டோமா என்று அகத்தில் ஆராய்ந்து எல்லோருக்கும் உரிமைகள் உரியன என்ற உண்மையை உணருவோமாக.

# இல்லறத்தில் துறவறம் பேணிய அம்மை

[சுவாமி சர்வாதீதானந்தா,
இராமகிருஷ்ணமடம், கதிர்காமம்.]

இந்தியாவிலே நீர்வளம் நிலவளம் வாய்க்கப்பெற்ற ஓர் சிற்றூர் ஜெயராம்பட்டி. நன்செய் அவ்வூர் மக்களின் தொழிலாகும். தேவி வழிபாட்டையே மக்கள் பெரிதும் கடைப்பிடித்து வந்தனர், ஜெயராம்பட்டியிலே இராமச்சந்திரரும் சியாமசுந்தரியும் ஒரு சிறிய ஏழைப் பிராமணக் குடும்பம். அங்கு ஆட்கொள்ளும் தேவியின் அருளால் ஆடம்பரம் ஒன்றையும் அறியாத இத்தம்பதிகட்கு 1853-ம் வருடம் டிசம்பர் மாசம் 27 ந் திகதி ஒரு குழந்தை அவதரித்தது. அக்குழந்தைக்குச் சாரதாமணி என பெயர் சூட்டி அன்பு பாராட்டி வளர்த்து வந்தனர் பெற்ருேர்

இளமையிலிருந்தே இதன் மனம், கல்லிலும் களி மண்ணிலும், மரத்திலும் கடவுளைக் காண்பதில் ஈடுபடலாயிற்று மங்கையர் தம்தம்குல ஒழுக்கத்துக்கேற்ப வாழத் தெரிந்துகொண்டால்போதும் என்பதே பெற்ருேர்நோக்கம். இக்கொள்கைக் குட்பட்டவளாக சாரதாமணியும் வளர்க்கப்பட்டாள். தன் தம்பிமாரைக் கவனிப்பது; பள்ளிக்கூடம் அழைத்துச் செல்வது; பள்ளிக்கூடத்தில் அவர்கள்கற்பதைக்கேட்டுக்கொண்டிருப்பது போன்றவைகளில் ஈடுபட்டாள். ஆனல் அவள் எழுதவும் வாசிக்கவும் படித்தாளில்லை. கண்டும் கேட்டும் மட்டும்தான் கற்றுக்கொண்டாள். பிற்காலத்தில் பார்த்தாவுடன் இருக்கும்பொழுது இராமாயணம் முதலியன போன்ற நூல்களைச் சில பெண்களின் உதவியுடன் கேட்டுப் படித்தாள். அனுபவம் அவளுக்குச் சிறந்த படிப்பைக் கொடுத்தது. இவ்வளவுதான் இவள் படித்த படிப்பு. இளமையிலேயே வீட்டு வேலைகளைச் செய்து வந்தாள்; களனிகளிலும் தன் சக்திக்கேற்ப பசுவுக்குப் புல்லறுத்தல் வேலையாட்களுக்குச் சிற்றுண்டி கொண்டு போதல், வயலில் அறுவடை செய்தல்முதலியனவும்செய்து நல்ல பயிற்சி பெற்ருள். இளமையில் இவள் கண்டும், கேட்டும் கற்றவை கல்மேல் எழுத்துப் போன்று மறையாது அவள் மனத்தில் படிந்திருந்தது. இவைகளையே பிற்காலத்தில் தம் சிஷ்யர்கட்கும் புகட்டியுள்ளார்.

ஜெயராம்பட்டிக்குத் தென்கிழக்கே மூன்று கல தூலைவில் காமார் புகூர் எனும் கிராமம் ஒன்றுண்டு

இளமையில் கதாதரர் எனும்நாமம்பூண்டஸ்ரீ இராமகிருஷ்ணர் தட்சினேசுவர ஆலயத்தில் காளிகாதேவிக்கு அருச்சகராக இருந்தார். இவர் கடவுள்மேல் பித்துப் பிடித்து ஆடியும் பாடியும் பூசை செய்வார். கடவுளைக் காண்பது தவிர வேறு எக்காரியங்களிலும் இவர் நாட்டம் செல்லவில்லை, இதை அறிந்த மக்கள் உண்மையில் இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது எனக் கூறுவாராயினர். இதைக் கேட்ட பெற்ருேர் இதற்குப் பரிகாரமாகக் குடும்பப் பாரத்தைச் சுமத்த எண்ணி பெண் தேடினர்கள்; யாவரும் இவருக்குப் பைத்தியம் என்று சொல்லி பெண் கொடுக்க முன்வரவில்லை. இது இவர்கட்குத் துன்பம் தருவதாயிற்று. இதையறிந்த கதாதரரே தம் பெற்ருேர் துயர் துடைக்க எண்ணி, "ஜெயராம்பட்டியிலே இராமச்சந்திர மகாமகோபாத்தியாயர் வீட்டில் எனக்கென்று ஒரு பெண் இருக்கிருள் அங்கு செல்லுங்கள்" என்ருர். இப்படி இவர் கூறியது பெற்ருேர்க்கு வியப்பாயிற்று அவ்வாறே அவர்களும் அங்குச் சென்று பெண கேட்டனர். அவர்களும் முன் தயங்கிப் பின் ஒப்புக்கொண்டனர். அப்பொழுது சாரதாமணிக்கு வயது ஆறு; வரனுக்கோ வயது இருபத்தி நான்கு 1859 ம் வருடம் மே மாதம் வைதிக முறைப்படி சடங்கு செய்து வைக்கப்பட்டது இல்லறம் ஓர் உயர்ந்த வாழ்க்கை. சிற்றின பத்துக்கு மட்டுமன்று வாழ்க்கை காதலர் இருவர் கருத்தொருமித்து தர்மத்தில் செல்லுதலே அதன் இலட்சியம என்ற கொள்கைகளில் வாழ்ந்து வந்தனர் இத்தம்பதிகள்.

கடவுளைக் காணுதலை ஒன்றே பிறவிப் பயன என மனைவிக்கு எடுத்துச் சொன்னார் அவர் கடவுள் பக்தி பூணுதல், உலகத்தவர்கட்கு தம் கடமைகளைத் திருந்த செய்தல் முதலியவற்றைத் தம் துணைவியாருக்குப்புகட்டினர் ஸ்ரீ இராமகிருஷ்ணர். அதன்படியே சாரதா தேவியாரும் அவர் நோக்கமறிந்து வாழ்க்கை நடத்தினர். வாழ்க்கையின் இலட்சியம் எதுவாக இருப்பினும் அதைக் கடைப்பிடிக்கும இல்லறத்துள் இருவரது கருத்தும் ஒருமித்தது இருந்தாலொழிய பெரு நன்மை பிறவாது. கணவர் பூண்ட தவநெறியையே கடைப்பிடித்து வந்தார் அம்மை. "என் உள்ளத்தை உலகம் நாடுகிறது. உவந்து அளித்துவிட்டேன் ஆதலால் உடலின்பத்துக்கு அது உடன்படுவதில்லை. ஆயினும் வேத விதிப்படி உன்னை மணந்த நான் உனது இச்சா சுதந்திரத்தைப் பூர்த்தி செய்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் உன் கருததை ஒளியாது வெளியிடுக" என்று கேட்டார். சாரதாதேவியார் "தேவே! தங்கட்குத் திருத்தொண்டு புரிந்து பேரருளுக்கு உரியவளாகி உய்தற் பொருட்டு இங்கு வந்தடைந்தேனே ஒழிய, தங்களைப் பந்தத்தில் தள்ளுதற் பொருட்டன்று" என்று பகர்ந்தார் இதனின்று இவ்விடை எவ்வகையது என்பது சொல்லாமலே விளங்கும். இதில் தெய்வீக சுபாவம் விளங்குகிறதல்லவா. பலமுறை பல வருடங்களாக பரமஹம்சரும் சாரதா தேவியாரும் ஒருவரை ஒருவர் சந்திக்காமல வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஒருமுறை முன்னவர் தட்சிணேசுவரத்தில் காளிகோயிலில் கடும் தவம் புரிந்துகொண்டிருந்தார், பின்னவர் பிறந்தகத்தில் அமைதியாக வாழ்ந்து வந்தார். சரீரங்கள் வெவ்வேறிடங்களி லிருந்தாலும அவர்களுக்கிடையே ஆத்மீக இணக்கம் ஏற்பட்டிருந்தது.

தம் ஆருயிர்த் துணைவர் ஸ்ரீ. இராமகிருஷ்ணர் இறக்கும் தறுவாயில அவர் பக்கத்தே இருந்து பணிவிடை செய்தார். அவர் உயிர்நீத்ததும் உலக வாழ்வே இருள் சூழ்ந்ததுபோன்று அவர்க்குத் தென்பட்டது. இந்து முறைப்படி விதவைக்கோலப் பூணும் சடங்கு நடக்கையில் திரு. இராமகிருஷ்ணர் திருக்காட்சயல் தோன்றி, "நீ யாது செய்கின்ருய்? நான் மாயந்து போகவில்லையே! நான் ஓர் அறையினின்று மற்ருேர் அறைக்குச் சென்றுபோன்றிருக்கிறது, நான் இப்போது அடைந்த நிலை. இக்கைம் பெண் கோலம் எதற்காக?" என்ருர். அதற் கேற்பச் சாரதாதேவியாரும் சுமங்கலியின் சின்னங்கள் சிலவற்றைத் தரித்து வாழ்வாராயினர்.

ஸ்ரீ. இராமகிருஷ்ணர் மறைந்து இரு வாரங்களில் சாரதாதேவியார் தம துணைவர் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய எண்ணித் தம் சிஷ்யர்கள் சிலருடன் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டார். வைத்தியநாதம், காசி, அயோத்தி, பிருந்தாவனம் முதலிய பதிகளே அவர் சென்ற புண்ணிய தலங்களாகும். கங்கையில் நீராடி விசுவநாதர் தரிசனம் பெற்ருர் பிருந்தாவனம் ராதாரமணன் கோயில் சென்று பகவானை நோக்கி, "இறைவ பிறரிடம் குற்றம் காண்பதே மனிதன் இயல்பு, எனக்கு அத்தகைய மனது வேண்டாம், அதை அடியோடு என்னிடமிருந்து நீக்கிவிடு; எவரைக் காணிலும் அவர்கள் நற்குணமே என் கருத்தில் படுக' என வேண்டிக் கொண்டார். அதன பயனுக அவர் இயல்பும் அடியோடு மாறிவிட்டது. நல்ல மனமுடைய தாய்க்கு உலகம் முழுவதும் நலமுடையதாகவே காட்சி கொடுத்தது. இங்கு ஒரு வருடமிருந்து வழிபட்டுவிட்டு, தென்னகம் வரைச் சென்று மற்றைய தீர்த்தங்களும் ஆடிவிட்டு கல்கத்தா திரும்பினர்.

பின்னர் காமாற்புகூர் சென்று சில வருடங்கள் வறுமையான வாழ்க்கைக்கு இலக்கானர். இதை அறிய வந்த இராமகிருஷ்ண மடச் சந்நியாசிகள் இவரைக் கல்கத்தா கூட்டிச்சென்று ஸ்ரீ. இராமகிருஷ்ணர் மடத்திலேயே வைத்துச் சிறப்பித்தனர். இங்கும் தம் புக்ககத்திலுமாகச் சில காலத்தைக் கழித்தனர்.

அன்னையார் இறுதியில் இயம்பிய சில உறுதி மொழிகள் நமக்கு உயிரளிக்கும் உபதேசமாகும்.

இல்லறத்தார் துறவறத்தார் ஆகிய இரு தரத்தாருக்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நல்லைக்கீர்த்தனம் — 25.

## "கொடியோருளமதைக் கொன்றிடும் வேல்"

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பாகேஸ்ரீ : தாளம் : ஆதி

பல்லவி

அருகிருக்கப்போது அஞ்சேல் - மனமே
திருநிகழ்ந்திடும் நல்லை முருகனின் கைவேல்

அனுபல்லவி

உருகி உருகித்தினம் உள்ளம்வெதும்பும் எந்தன்
இருவிழி நீருருவிபெருகித் ததும்பும் கந்தன்

சரணம்

வடிவேல் வந்திடும் வரங்களும் தந்திடும்
அடியோம் இன்புற அருள்தனைச் சிந்திடும்
மிடியோ டிடர்களைப் பொடிசெய முந்திடும்
கொடியோ ருளமதைக் கொன்றிடும் வென்றிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் 16 மார்கழி — 22 மார்கழி

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். உமது உடல்நிலையும் திருப்தியாயிருக்காது. பித்தக்கோளாறுகளுக்கு இடமுண்டு சிறு குடும்பக் குழப்பங்களும் ஏற்படும். பணமளவில் நல்லவாரம் ஆனல் வேலைகூடுதலாக இருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வாகனமூலமான தொல்லைகள் ஏற்படும். குடும்பநிலைமைகள் திருப்திகரமாயிருக்காது. உடல்நிலையும் பாதிக்கப்படும். பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

பணமளவில் நல்லவாரம். குடும்ப ஐக்கியம்நிச்சயம். புதியமுயற்சிகள் வெற்றிதரும் நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

சண்டைகளுக்கு முந்திநிற்பீர்-குடும்பநிலைமைகள் மேலும் தொடர்ந்து குழம்பலாகவே இருக்கும். எதிரிகளுக்கு இன்னல் ஏற்படும். நண்பர்கள் இக்கட்டிலிருந்து காப்பர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் வெற்றியாகும். பணமளவில்நல்லவாரம், போட்டியிடுவோரை வெல்லல் நிச்சயம். தம்பி தங்கைகள் மிக உதவியாயிருப்பர்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் நல்லவாரம். நண்பர்கள் இடரிலிருந்து காப்பர். ஆனல் சிறு உடல்நிலைக்கோளாறுகளுக்குஇடமுண்டு கண்ணோய் ஏற்படும். இரகசியஎதிரிகள்பற்றி எச்சரிக்கை.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தம்பி தங்கைகள் இடர்களிலிருந்து காப்பர் பண இலாபமும் புகழும் நிச்சயம். ஆனல் தாயாரின் உடல்நிலை ஊறுபடும், நிலபுலங்களால் இலாபம் ஏற்படும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பண இலாபங்கள் நிச்சயம். விவசாயம் நல்ல பயன்தரும். நண்பர்கள் மிக உதவுவர். தந்தைவழி உறவினர்மூலமான தொல்லைகள் உண்டாம்-

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

ஞாயிறு காலை தொல்லைகரமானது உடல் நிலை ஊறுபடும். தந்தைவழி உறவினர் உமக்கு மிகத் தொல்லைதருவர், பணமளவில் ஓரளவு நல்லவாரம் பழைய முதலீடுகள் நல்ல விளைவைத் தரும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிபட வேண்டும், மிகுதி நாட்கள் தொழில் ஈடுபாடுகளுக்கு ஏற்றவை. ஆனல் உடல் நிலை பிரச்சினையே,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பத்தகராறுகளுக்கு இடமுண்டு. உடல் நிலையும் தொல்லையே தொழிலளவில் நல்லவாரம் தந்தையாரின் உறவினர் உதவி கிடைக்கும். புதன், வியாழன், வெள்ளி காலை எச்சரிக்கையோக கழிக்கப்பட வேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

எதிர்ப்புகளைத்தாண்டி வெற்றி பெறுவீர், தொழில் வெற்றி நிச்சயம், சிறு உடல் நிலைக் கோளாறுகள் ஏற்படும் வெள்ளி மாலை சனியை எச்சரிக்கையோடு கழிக்குக.

---

## இல்லறத்தில் துறவறம் பேணிய

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் பிரமச்சரியம் இன்றியமையாதது, ஏனெனில் உடல் சம்பந்தமான ஆசை போனலொழிய ஆத்மானந்தம் தோன்றுது.

உடல் இன்றிருக்கிறது நாளை மறைகிறது; அதற்கிடையிலும் பல துன்பத்திற்கு உட்படுகிறது இப்படி விசாரம் செய்து விவேகத்தையும் வைராக்கியத்தையும் பெறவேண்டும்.

கடவுளுக்காக அனைத்தையும் துறப்பவன் கடவுளாகிருன்.

கடைசியாக ஒரு மாது மூலம் உலகத்துக்குக் கூறிய செய்தி, "மகளே! உனக்கு மனவமைதி வேண்டுமானல் உலகத்தவர் மீது குறை கூருதே, முதலில் உன்னிடத்திலுள்ள குற்றங்களைக் களைப்பார், உலக முழுவதையும் உன்னுடையதாக்கக் கற்றுக் கொள். நமக்கு வேண்டியவர் வேண்டாதவர் எனும் வேற்றுமை நிலையில் யாருமில்லை. உலகனைத்தும் நமதே இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்" எனக் கூறிப்போந்தார்.

எண்ணெய் குறைந்த தீபம் அணைவதுபோல் அன்னையின் ஆக்கையின் வலிவு ஒடுங்கிற்று இறுதிகாலமும் அணுகிற்று 1920-ம்வருடம் ஜூலை மாதம 21-ந் திகதி அதிகாலையில் அன்னை ஸ்ரீ. சாரதாதேவியார் பூத உடல் நீத்துப் பொன்னுடல் எய்தினர்.

பெண்மையின் எடுத்துக் காட்டாக அன்னை விளங்கினர். அவரது பெண்மையில் மனைமாட்சியும், தாய்மையும், துறவும் ஒன்று சேர்ந்து உச்சஸ்தானம் பெற்றுத் திகழ்ந்தன, பெண்மையின் பண்பு அடையாத நாடு பயன் ஒன்றும் அடையாது என்பது மேலோர் கொள்கை. துன்பப்படும் இந்தியாவுக்குத் துயர்துடைக்க, பண்டைப் பெண்மையனைத்தும் திரண்டதொரு வடிவாய் நமமிடையில் வந்தருளினர் அன்னை அத்தகைய புனிதம் வாய்ந்த பெண்ணுலகை நாம் போற்றுவோம். அவர் அறவுரைகளைக் கேட்டு அவ்வழி நடப்போம். அவர் நல்வாழ்வைப் பின்பற்றி நாம் நலம்பெற்று வாழ்வோமாக.

---

நேயர்கள் நெஞ்சம்

## உண்மை விளக்கம் உரைபற்றி விளக்கம்

7-12-62ம் தேதி இந்து சாதன இதழில் சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர், திரு. இ செல்லத்துரை அவர்கள் சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்ருன "உண்மை விளக்கம்" இதற்கு உரை எழுதியிருந்தார்.

அதில் காப்புச் செய்யுளாகிய வெண்பாவில் வருகின்ற, "திண்மதம்" என்பதற்கு ("ஞானசத்தி, கிரியாசத்தி ஆகிய இரண்டு) வலிய மதங்களும்" என்று காணப்பெறுகின்றது.

யானைக்கு, கரம், கன்னம், கோசம் ஆகிய மூன்றிடங்களினின்றும் மதம் வருவதாதலின் யானை வடிவத்தையுடைய விநாயகப்பெருமானுக்கு மும்மதம் பொழியும் மூர்த்தி எனக் கூறிவருவது மரபு.

"அறிவிச்சை தொழிலென்ருேதும், மதம்பூத்த விநாயகன்' என்று நாவலர் ஐயா அவர்கள் விநாயக வணக்கம் சொல்லியிருக்கின்ருர்.

"ஒருகொம் பிருசெவி மும்மதம் என்று நாவலர் ஐயா அவர்களால் உரையெழுதப் பெற்றுள்ள மருதூரந்தாதி" நூலாசிரியர் அவர்கள் காப்புச் செய்யுளில் கூறுகின்ருர்.

இன்னும் மும்மதம் எனக் கூறியிருப்பவைகளை உதாரணமாக எழுதுகில் நூற்றுக் கணக்கில் எழுதலாம் தேவையில்லை.

இந்துசாதன இதழ் மூலமாக சைவப்புலவர் திரு செல்லத்துரை அவர்கள் தயவுசெய்து "இரண்டு மதங்கள்" என்று எழுதியதற்கு ஆதாரங்களை எழுதிச் சைவ நன்மக்களைத் திருப்திபெறச் செய்யட்டும்.

வணக்கம்.

சி. சின்னையா,
ஆசிரியர்.

கச்சாய்
10-12-62.




## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டிலே
காரைநகர்
பொன்னையா மயில்வாகனம்
வழக்காளி,
வழ. இல: M B 2908
எதிராக
பிரதான வீதி யாழ்ப்பாணம்.
1. பேதுறுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் தோமாசி.
2. ஹென்றி மரியாம்பிள்ளை அல்லது பெரியதம்பியும் பெண்
3. மாகறற்றும்
- எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 2908ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் காணிகள் 1963-ம் ஆண்டு தை மீ 12 உ சனிக்கிழமை (12-1-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 5600-ம் இன்னும் ரூபா 5000-க்கு 1-7-59 தொடக்கம் 24-5-60 வரை 24 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 24-5-60 தொடக்கம் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 468-80ம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "அரசன் நிலையிட்ட முதலியார் வளவு" குளி (14) பதினலும் வீடும் கிணறும் கக்கூசும் செய்பயிர் வான்பயிர்களும் இன்னும் பிரதான வீதியிலிருந்து இக்காணிக்கு வருவதற்கு மூன்று அடிப் பாதையுரித்தும். இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் ஆர். ஏ. சந்திரசேகராவினுதனம். மேற்கு சிசில் பொன்னையாவினுரிமைகாரருக்கும் எம்.பி, சுவாம்பிள்ளையின் மனைவியின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம் தெற்கு குறித்த பாதையின் முகப்பும் ஆரிய லொட்ஜ் என்னும் ஆதனத்துக்குப் போகும் பாதையும் ஆரிய லொட்ஜ் என்னும் ஆதனமும்இதடங்கலும்.பதிவு D266/76.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று யாழ்ப்பாணப் பட்டணம் 3-ம் பிரிவில் சப்பல்வீதியிலுள்ள காணியில் மேற்குப் பக்கத்துண்டான 1948ம் ஆ சித்திரை மீ உத்தரவு பெற்ற உலாந்தா திரு எம். அலோஸியஸ் என்பவரால் 1402ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1ம் கண்டமாகச் சுட்டப்பட்டுள்ள விபர. 1 குளி 1¼, இந்தப் பரப்பு ஒன்று குளி பத்தேகாலும், யாழ்ப்பாணம் சப்பல்வீதி வரியிறை 35, 37, 39 இலக்கங்கள்கொண்ட வீடுகளும் கிணறும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு எம். எம்.ஏ பேக்கரினுதனம். வடக்கு திரு. ஜே. ஆம்ஸ்ருேங்கினுதனம். மேற்கு திருமதி ஆம்ஸ்ருேங்கினுதனம். தெற்கு சப்பல் வீதி. பதிவு D 265/223.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 5-12-62.
M. 207, 14-12-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
தம்பையா கோவிந்தன்
- வழக்காளி.
இல. 2360:
எதிராக
சாவகச்சேரி
தப்பையா பசுபதி.
— எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக கோட்டில் 2360-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1963-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 8-ம் திகதி (8-1-63) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 541-25ம், இதில் ரூபா 300க்கு 11-1-62 திகதி தொடக்கம் 16-4-62 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 173-10 சதம். இதில் ரூபா 60/- இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று சாவகச்சேரியிறை "ஆலடி வளவு" நிலப்பரப்பு (18ம்) பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும் மேற்கும் சாவகச்சேரி படையாண்டவன் தோட்டம் கந்தசாமி கோவில் ஆதனம், தெற்கு கந்தையா குமாரசாமிக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி (½).

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 27-11-1962.
M. 208 14-12-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில் தற்போது கிளிநொச்சி,
1, செல்லப்பா தியாகராசா சிவசுப்பிரமணியம்
2. பெண் புஷ்பம்
—வழக்காளிகள்.
இல M. B. 3907
எதிராக:
வண்ணார்பண்ணை கிழக்கு,
ஆனைப்பந்தி,
நாகலிங்கம் நவரத்தினம்
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3907-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1963-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 23-ம் திகதி (23-1-63) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 4372-50 ம், இதில் ரூபாய் 3000-க்கு 20-2-61 திகதி தொடக்கம் 19-10-61 திகதி வரைக்கும் 100-க்கு 15 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 206-27 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை ஆனல் உறுதியில் பிழையாக வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை என்று குறிப்பிட்டிருக்கு) "கம்பன்புலம்" நிலப்பரப்பு 1¾ ம் வீடும் கிணறும் மற்றும் பயிர்களும். எல்லை கிழக்கு லை ஒழுங்கை, வடக்கு சுப்பர் மாரிமுத்து பெண் அன்னம்மாவின் உரிமைக்காறருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கணபதி பெண் சிதம்பரத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஆனந்தமாணிக்கம் பெண் கண்ணம்மாவின் ஆதனம், இதடங்கலும்.

முற்பதிவு D 257/195.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 16-11-1962.
M. 209 14-12-62

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| **உள்நாடு** | |
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| **வெளிநாடு** | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மை விளக்கம்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

விட்டு நீங்காத ஆணவமலம் யாது? வினை ஏது - வினை என்று சொல்லப்படுவது யாது? (மற்று) இவற்றின் வேறு ஆகா நான் ஏது? - இம் மும்மலங்களையும்பற்றி நின்றவிடத்து இவற்றின் வேருகாமல் இவையேயாய் நின்ற எனது சொரூப இலக்கணம் யாது? நீ ஏது - இறைவனது சொருபலக்கணம் யாது? நாதன் நடம் ஏது - ஆன்மநாதனுகிய இறைவனது திருநடனம் யாது? அஞ்செழுத்துத்தான் ஏது - திருவைந்தெழுத்தின் உண்மைப் பொருள் யாது? (நீ) சாற்று - (இவ்வினுக்களுக்குரிய விடைகளை நீ) சொல்லியருளுவாயாக.

பொழிப்பு: ஆருறு தத்தவம், ஆணவம், வினை, ஆன்மா, பதி, திருநடனம், திருவைந்தெழுத்து என்பன யாவை? ஞாஞசிரியனே கூறுவாயாக.

தேசிகனின் மூன்னுரை:

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து — தேள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ்புதல்வா உற்று. 3.

கொ—கூ: ஆனந்த யோகம் நிகழ் புதல்வா, உன்றனக்கு, வள்ளல் அருளால் அன்று வாய் மலர்ந்து சொன்ன சீர் ஆகமங்கள் உள்ளபடி, அடைவிலே தெளிய, இத்தை உரைக்க உற்றுக் கேள்,

ப—ரை: ஆனந்தயோகம் நிகழ் புதல்வா - பேரானந்த நிலையைப் பொருந்தி இருப்பதற்குப் பக்குவமான மாணுக்கனே, உன்றனக்கு - உனக்கு, வள்ளல் அருளால் - பரோபகாரியான இறைவன் தம்மிடம் இயல்பாகவே பொருந்தியிருக்கும் பேரருளினுலே, அன்று வாய் மலர்ந்து சொன்ன - அநாதியே திருவாய்மலர்ந்தருளிய, சீர் ஆகமங்கள் உள்ளபடி அடைவிலே தெளிய - சிறப்புப்பொருந்திய சிவாகமங்களில் உள்ள உண்மை இருந்தபடி முறைமையாகத் தெளியும் பொருட்டு, இத்தை உரைக்க உற்றுக் கேள் - இதனை (- நீ கேட்ட வினுக்களுக்கு உரிய விடைகளை) யான் சொல்லப் புலவொடுக்கத்தோடு கேட்பாயாக.

பொழிப்பு: மாணுக்கனே, இறைவன் அருளிய ஆகமங்களில் உள்ளபடி இதனை யான் தெளிவாகச் சொல்ல நீ கேட்பாயாக.

ஆருறு தத்துவம்:

**ஐம்பூத வடிவும் அவற்ருலாம் உடம்பும்**

நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏற்குமனல் மூக்கோணம் எப்போதும் — ஆர்க்கும்
அறுகோணங் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாயம் ஆமிவற்ருல் உற்று, 4.

கொ—கூ: பூமி நாற்கோணம் (நண்ணும்), புனல் மதியின் பாதி நண்ணும், அனல் மூக்கோணம் ஏற்கும், கால் எப்போதும் அறு கோணம் ஆர்க்கும், ஆகாயம் வட்டம் (ஆர்க்கும்), ஆன்மா உற்று உறு காயம் இவற்ருல் ஆம்.

ப—ரை: பூமி நாற்கோணம் (நண்ணும்) - நிலம் நாற்கோணமாய் இருக்கும், புனல் மதியின் பாதி நண்ணும - நீர் பாதிச் சந்திரனைப்போன்றதாய் (நிலத்தில் அமைந்திருக்கும்; அனல் மூக்கோணம் ஏற்கும் - தீ முக்கோண வடிவினைப் பொருந்தி நிற்கும்; கால் எப்போதும் அறுகோணம் ஆர்க்கும் - காற்று எக்காலமும் அறுகோணமாக இருக்கும்; ஆகாயம் வட்டம் (ஆர்க்கும்) - ஆகாயம் வட்டவடிவத்தைப் பொருந்தும்; ஆன்மா உற்று உறு காயம் இவற்ருல் ஆம் - ஆன்மாவானது வேறுபடப் பொருந்தி நிற்கும் உடம்பு இந்த ஐம்பூதங்களினுல் உண்டாகும்.

பொழிப்பு. நாற்கோணம் பாதிமதி முக்கோணம அறுகோணம் வட்டம் என்னும் வடிவங்களை முறையே பொருந்தின நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் தூல பஞ்ச பூதங்களினுல் உடம்பு ஆயது. (தொடரும்)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M.B. 3470.

அப்பாத்துரை நவரத்தினசிங்கம் மல்லாகம் —வழக்காளி.

எதிராக

1. நல்லதம்பி அருமைத்துரையும் மனைவி
2. ஆச்சிப்பிள்ளை
3. நாகலிங்கம் மகள் கண்மணி
4. முருகேசு நாகலிங்கம்

மல்லாகம் —எதிரிகள்'

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3470 ஆம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு தைமாதம் 26-ம் திகதி சனிக்கிழமை காலை 10½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-ரூபா 3525-ம் 29-6-60 தொடக்கம் 21-7-61 வரையிலும் ரூபா 3000-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் பணம் முற்ருக இறுபடும்வரையில் முழுத்தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 266-08 ம். இதில் செலவின் பெயரால் ரூபா 150- கொடுக்கப்பட்டது.

ஆதனடாப்பு:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மயிலிட்டிக் கோவில்பற்று மூலவை இறை 'கேணிப்புலவு'' பரப்பு நிலலாசசம் 40. இதற்கு எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு கணபதியார் வயிரமுத்துவினதும. நாகலிங்கம் கைம்பெண் சின்னத தங்கத்தினதும், இளையதம்பி பொன்னையாவினதும் உரிமைக்காரர்களுக்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு வேலுப்பிளளை விநாயகருக்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனம். இதடங்கலில சொரியலாக நாற்பதில் எட்டுப்பங்கும் (8/40).

இக்காணி இரண்டாவது மூன்ருவது எதிரிகளின் பெயரிலும் இரண்டாம் ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
''முருகன் இல்லம்''
இணுவில், 12-12-62.

M 212 14-12-62.

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

பரிசில்கள் பெறுவோர்

சென்ற புரட்டாதிமாதம் தமிழ்மறைக் கழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்விலே பரிசில் பெறுவோரின் பெயர்களைக் கீழே காண்க முதற் பரிசிலுக்குத் தங்கப் பதக்கமும் ஏனையவற்றுக்கு வெள்ளிப் பதக்கங்களும தமிழ்மறைக் கழகத்தின் பதினோராவது திருக்குறள் மாநாட்டில் திருவள்ளுவர் திருநாளாகிய 6-6-63 இல் வழங்கப்படும் (பெயர்களுக்கு முன்னுள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற இடங்களாகும்.) சான்றிதழ் பெறுவோர் விபரம் பின்னர் வெளியிடபபடும்.

முதலாம்பரிசு நா, ஆறுமுகம் தெல்லிப்பழை.

இரண்டாம் பரிசு இ. புட்பராணி, சுளிபுரம்

மூன்ரும் பரிசு இ. சற்குணராசா சுளிபுரம்

நான்காம் பரிசு: நா, பாலசுப்பிரமணிய ஐயர் முள்ளியவளை.

மததிய பிரிவு

முதலாம் பரிசு: த, சச்சிதானந்தன், கல்முனை.

இரண்டாப்பரிசு சி. கிருஷ்ண பிள்ளை களுவாஞ்சிகுடி.

மூன்ரும் பரிசு அ. வேல்நாயகி யாழ்ப்பாணம்,

நான்காம் பரிசு: வே. ஹரிதாஸ் மட்டக்களப்பு.

கீழ்ப் பிரிவு

முதலாம் பரிசு: சு. கமலநாயகி யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு: கு. தேவசகாயம் மட்டக்களப்பு,

மூன்ரும் பரிசு: சி. கனகாம்பிகை, யாழ்ப்பாணம்.

நான்காம் பரிசு: ஆ, கௌரி தேவி, மட்டுவில்.

தொடக்கப் பிரிவு

முதலாம் பரிசு நா. வைத்தியநாதன், கொழும்பு

இரண்டாம் பரிசு த. நளினி கீரிமலை.

மூன்ரும் பரிசு: ச. திரேசா பூமலர் கொழும்பு

நான்காம் பரிசு: வை. சிவாஜி யாழ்ப்பாணம்.

மிகக்குறைந்த வயதினருக்குரிய பரிசில் நா. விக்கேசுவரி, யாழ்ப்பாணம் (பிறந்ததேதி 18-8-55)

### சங்கரத்தை மாதர் முன்னேற்றச்சங்க மண்டபத் திறப்பு விழா

—:—

ஷை மண்டபம் சென்ற 23-11-62 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-20 மணியளவில் பிரம்மஸ்ரீ. மகேஸ்வரஐயர் அவர்களால் சமயாசார முறைப்படி திறந்துவைக்கப்பெற்றது. தையல்வகுப்பு செல்வி இ. ஸ்ரீகாந்தமலரால் ஆரம்பிககப்பெற்றது அன்றைய நிகழ்ச்சிகள் மிகவும் அமைதியாகவும், சிறப்பாகவும் சங்க அங்கத்தினரின் கூட்டுப்பிரார்த்தனையுடன் பூர்த்தியாயிற்று.

தொடர்ந்து இரண்டாம் மூன்ரும் நாட்களும் நடந்த நிகழ்ச்சிகளில் அவ்வூர் மக்களின் அறிவு, ஒழுக்கம், ஒற்றுமை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உழைப்பதெனச் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

### புராண ஆசானுக்கு ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புராணம் கற்பித்த ஆசிரியர் உயர்திரு. பண்டிதர் மு. கந்தையா B. A., அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தலும், பி. ப. 12-30 மணிககு மகேஸ்வர பூசையும். பி.ப. 2 மணிக்கு வருடாந்தப்பொதுக் கூட்டமும் நடைபெறும்.

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 1

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 7077-ம் இலகக வழக்கில் 1962-ம் ஆ கார்த்திகைமீ 1-ம் உ யைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1963-ம் ஆ தைமீ 24-ம் உ வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்:

கெருடாவில் கணபதிப்பிள்ளை சிவானந்தசுந்தரம் —வழக்காளி.

எதிராக

கெருடாவில் செல்லப்பா இராசேந்திரம், காலஞ்சென்ற செல்லையா கைம்பெண் புவனேஸ்வரி அம்மாவின் ஆதனத்துக்குக் காரியஸ்தன் என்ற வகையில் —எதிராளி.

அறவிடவேண்டிய தொகையின் விபரம்:

வருமதி ரூபா: 1582-50. 7-6-61 தொடக்கம் 31-1-62 வரைக்கும் ரூபா 1000-க்கு 15 வீத வட்டி ரூபா 117-50 31-1-62 தொடக்கம் 23-10-62 வரைக்கும் ரூபா 1612-50 க்கு 5 வீத வட்டி ரூபா 196-50. கோட்டுச் செலவு ரூபா 268-15. கூடிய ரூபா 2074-95-

ஆதனம்

கெருடாவிற் குறிச்சியிறை மாழைசிட்டி நில, பர. 20. ஷை கொம்பஞ்ஞேவிற் கொள்விலை மாழைசிட்டி நில. பர. 16 5/8. ஷை மாலைசிட்டி நில, பர, 21. ஷை கொம்மஞ்ஞேவிற் கொள்விலை மாலைசிட்டி நில. பர. 10⅛. இவைகளில் மேற்குப்புறமாக ⅔ பங்குக்கு ஆட்சிப்படி நில. பர. 47. குளி 3, இதில் கிழக்குப் புறமாக நில பர. 6 நீக்கி மீகுதியில் கிழக்குப்புறமாக 6/13 பங்குக்கு ஆட்சப்படி நில, பர. 17 குளி 11 1/3. எல்லை கிழக்கு ஆறுமுகம் தம்பையாவுககும் மறுபேருக்கு முடைய ஆதனம் வடககு ஒழுங்கை. மேற்கு கிருஷ்ணநந்தன் பெண் இரததினத்துககுடைய ஆதனம். தெற்கு சிங்காரம் கைம்பெண் கனகம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இவ்வெல்லைககுட்பட்ட நிலம் பனைகள், வடலிகள், தென்னை மாக்கள் முழுவதும் முழுக்காணிக்கு கிழக்குப்புறமாகவும் மேற்குப்புறமாகவும் இருக்கும் கிணறுகளில் 1/3 பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

S. C. Kangasabai
கொம்மிசனர்

புலோலிகிழக்கு, 7-12-1932.

M 206, 14-12-62.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல. M. B. 3151

இப்பொழுது தெல்லிப்பழை கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடனும் விலாசத்துடனும் நடத்தப்படும் தெல்லிப்பழை ஐககிய விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கம் - அதன் தலைவரும் காரியதரிசியும் முறைப்படி தெல்லிப்பழை கிழக்கு தி மாணிக்கவாசகர் நல்லப்பாமூலம்

— வழக்காளிகள்.

எதிராக

யோவான் சவரிமுத்து
தெல்லிப்பழை கிழக்கு
—எதிரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 3151-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு மாசி மாதம் 2-ம் திகதி சனிக்கிழமை காலை 10½ மணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தல் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 1593-10 20-11-60 தொடககம் தீர்வைத் திகதிவரைக்கும் ரூபா 1308-90க்கு 4வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் முழுத் தொகைக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 240-92 ம். செலவால் ரூபா: 300-ம் 200-ம் கொடுக்கப்பட்டது.

ஆதன இடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை கோவில்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை ''தச்சன்காடு'' நிலப்பரபபு 10½ செய்பயிர் வான்பயிர்களும் கிணற்றில் பங்கும் கல்லால் கட்டப்பட்ட கட்டிடங்களும். இந்த நிலப்பரப்பு 10½-ககு எல்லை கிழக்கு தன்னியன் ஆசிர்வாதத்தின் ஆதனம்; வடக்கு யக்கோபித்தக்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு சந்தியோ தீமையாவிற்கும் மறு பெயர்களுககுமுரிய ஆதனங்கள், இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 2-ம் கல்லால் கட்டப்பட்ட கட்டிடம் நீந்தமாகவும்' முற்பதிவு H 92/189,

க. செல்லத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன்-இல்லம்.
இணுவில் 12-12-62.

M. 211 14-12-62.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 14-12-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவபபிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org